[2010 ஏப்ரல் 27

2. தகவல் கோரல்

(அ) சென்னை, புழல் சிறைச்சாலைக்குள் செல்ஃபோன், கூர்மையான ஆயுதம் போன்றவை காணப்பட்டமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.*

முற்பகல் 10–35

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை புழல் சிறையில் நேற்றுகூட, கஞ்சா, செல்ஃபோன், சிம் கார்டு, அறுவை சிகிச்சை செய்யக்கூடிய கூர்மையான கத்திகள் போன்றவற்றை polythene bag-லே போட்டு, அது ஜெயிலுக்குள் வீசப்பட்டு, கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. சிறைத் துறையில் அன்றாடம் இப்படி விதிமுறைகள் மீறப்பட்டே வந்துகொண்டிருக்கின்றன. இதுகுறித்து நான் மாண்புமிகு சிறைத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் காலையிலே ஒரு பத்திரிகையிலே பார்த்தேன். வெளியிலே, பக்கத்தில் ஒரு பந்து இருந்திருக்கிறது. அதை உடைத்துப் பார்த்ததில், ஒரு சிம் கார்டும், சின்ன பிளேடுகள் இரண்டும் இருந்ததாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இப்போது ஒவ்வொரு சிறையிலும் செல்ஃபோன்கள் மற்றும் உள்ளே போகக்கூடாத பிற பொருட்கள் இருக்கின்றனவா என்பதை வேகமாக search செய்து நடவடிக்கை எடுக்கும்படி அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அதுமாதிரிதான் திருநெல்வேலியிலும் சில இடங்களில் செல்ஃபோன்களைக் கைப்பற்றியிருக்கிறார்கள். எனவே, சிறைக்குள் இப்படி நடக்கிற நடவடிக்கைகளைத் தடுக்க வேண்டுமென்று சிறை அதிகாரிகளுக்கு கண்டிப்பான உத்தரவிட்டிருக்கிறோம்.